# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2020 யூலை

## (203) வியாபாரச் சட்டம்

---

## பகுதி - A

**வினா இல. 01**

ஒட்டுமொத்தப் பாடத்திட்டத்தையும் உள்ளடக்கியவாறு அரசியலமைப்பு, சட்ட மூலங்கள், வர்த்தகச் சட்டம் போன்றவை உள்ளிட்ட வியாபாரச் சட்டம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டிருந்தது.

வினாவின் சில பகுதிகளுக்கு பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட ஒரு சில பொதுவான குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன :

**1.3** இவ்வினாவில் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறை அல்லாதது எது எனக் கேட்கப்பட்டிருந்த போதிலும், அதிகளவான பரீட்சார்த்திகள் முற்கொடுப்பனவு என்ற விடையைத் தவறாகத் தெரிவு செய்திருந்தனர்.

**1.4** EPF சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத ஊழியர்களை அடையாளங் காணுமாறு கேட்கப்பட்ட இந்த வினாவுக்கு ஒரு சில பரீட்சார்த்திகள் பிழையாக அமய அல்லது தற்காலிக ஊழியர்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.5** சொற்ப அளவிலான பரீட்சார்த்திகள் பணிக்கொடையைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. இதற்கான காரணமாக பணிக்கொடைக் கணிப்பீடு பற்றிய போதிய அறிவு அவர்களிடம் காணப்படாமையே ஆகும். மேலும், சில பரீட்சார்த்திகள் இறுதிச் சம்பளத்திற்குப் பதிலாக முதலாவது சம்பளத்தைக் கவனத்தில் எடுத்திருந்தனர். அத்துடன், வேறு சிலர் அவரது சேவைக் காலத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

**1.12** ஒரு சில பரீட்சார்த்திகள் ஊழியர் நம்பிக்கை நிதி மீதியை மீளப் பெறுவதை பணிக்கொடை உரித்திற்கான உரிமையுடன் குழப்பி, தவறான விடைகளை வழங்கியிருந்தனர்.

முதலீட்டு சபையின் தொழிற்பாடுகள் பற்றிக் கேட்கப்பட்ட வினா இல. **1.10** இற்கும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் நோக்கங்கள் பற்றிக் கேட்கப்பட்ட வினா இல. **1.14** இற்கும் பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருக்கவில்லை.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் **1.1, 1.7** மற்றும் **1.8** ஆகிய வினாக்களுக்குச் சரியான விடைகளை வழங்கியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட புள்ளிகளில் அதிக வீதமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

<u>**பகுதி - B**</u>

**வினா இல. 02**

இவ்வினா பங்குடமைச் சட்டத்துடன் தொடர்புடையதாக அமைக்கப்பட்டிருந்தது. இங்கு தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில் பங்காளர்களின் கடமைகள் குறித்துப் பரிசீலிக்கப்பட்டது.

அதிகளவான பரீட்சார்த்திகள் **சுமனா** அவளுடைய கடமைகளை உதாசீனம் செய்தது பற்றியும் பணத்தைப் பெறுவதற்கு **பியாலின்** உரிமைகள் பற்றியும் சரியான விடைகளை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வழக்குச் சட்டத்தை மேற்கோள் காட்டி விடைகளை நன்றாக எழுதியிருந்த போதிலும், ஒரு சில பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**வினா இல. 03**

இவ்வினா முகவராண்மைச் சட்டம் பற்றியதாகும். இது முகவராண்மை உருவாகும் வழிகள் மற்றும் முகவர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் என்பன பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்தது.

ஒட்டுமொத்தத்தில் அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்குச் சரியான விடை அளித்திருந்த போதிலும், ஒரு சிலர் **குமுது** மற்றும் **மலாகா** ஆகியோருக்கிடையிலான முகவராண்மை உறவினைச் சரியாக அடையாளம் கண்டிருக்கவில்லை.

**பொடி பாஸ்** மற்றும் **ரேணுகா** ஆகிய ஒவ்வொருவருடனுமான ஒப்பந்தத்தின் கீழ் **குமுது**வின் பொறுப்பு பற்றி **பகுதி (b)** இல் பரீட்சிக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சேதத்திற்காக **குமுது**விடம் இருந்து நட்டஈடு கோர முடியாது என சரியான விடைகளை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை நியாயமானளவு திருப்திகரமானது.**

**வினா இல. 04**

**(A)** காப்புறுதிச் சட்டத்தின் பங்களிப்புக் கோட்பாடு பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவில் பரீட்சிக்கப்பட்டது. கோட்பாட்டு ரீதியான அறிவைக் கொண்டிருந்த அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர்.

**ஆன்** இரண்டு கம்பனிகளிடமிருந்தும் தலா ரூபா 50,000/- வீதம் நட்டஈடு கோருவதற்கான உரித்துக் காணப்படவில்லை என்பதைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் அடையாளங் கண்டிருந்தனர். ஒரு சிலர் ஒவ்வொரு கம்பனியினாலும் செலுத்தப்பட வேண்டிய விகிதசமத் தொகையைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

**(B)** இது வாடகைக் கொள்வனவு உடன்படிக்கைகளின் கோட்பாட்டு ரீதியான அம்சங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்த ஒரு இலகுவான வினாவாகும். இதற்கு சுய கற்றல் புத்தகத்தில் உரிய கவனம் செலுத்தியிருப்பின் இலகுவாக விடையளித்திருக்க முடியும்.

பரீட்சார்த்திகள் வாடகை உடன்படிக்கைகளின் கடப்பாடுகள் பற்றிச் சரியாக அடையாளங் காணக்கூடியதாக இருந்த போதிலும், பொருட்களின் உரிமையாளர் தொடர்பான விடைகள் திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இல்லை.**

**வினா இல. 05**

**(a)** இவ்வினா 'மாற்றத்தகு சாதனங்களின்' அடிப்படையிலான ஒரு வினாவாகும். வாடிக்கையாளர் ஒருவரால் கட்டளையிடப்பட்ட காசோலை ஒன்றின் மீதான கொடுப்பனவை மறுதலிக்கின்ற அதிகாரத்தை வங்கி கொண்டிருக்கின்ற சந்தர்ப்பங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. இந்த 2 வினாக்களுக்கும் அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்த போதிலும், "*கைமாறத் தகாதது*" எனக் குறுக்குக் கோடிட்ட காசோலை ஒன்றின் தாக்கங்களை விளங்கிக் கொள்ளாது விடை அளித்திருந்த ஒரு தொகுதிப் பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். எவ்வாறாயினும், வங்கியானது கொடுப்பனவை மறுதலிக்கின்ற அதிகாரத்தைக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகளால் மிக நன்றாக விடையளிக்கப் பட்டிருந்தது.

**(b)** தொழிலாளர் சட்டம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் அவருக்கு லீவு உரித்து உள்ளது என அடையாளம் கண்டிருந்தனர் ஆயினும் மிகச் சிலரே 84 நாட்கள் லீவு உரித்து காணப்படுகிறது என அடையாளம் கண்டிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியானது.**

**வினா இல. 06**

**(a)** இது ஒரு நேரடியான கோட்பாட்டு ரீதியான வினாவாகும். இங்கு நிதி நிறுவனம் ஒன்றில் ஒரு புதிய கணக்கு ஆரம்பிக்கப்படும்போது பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஆவணங்கள் எவை எனக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சிறந்த வீதத்தில் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(b)** பணச் சலவைத் தடுப்புச் சட்டம் மற்றும் கணினிக் குற்றங்கள் சட்டம் ஆகியன தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு இவ்வினாவின் மூலம் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தக் கோட்பாட்டு ரீதியான வினாவுக்கு திருப்திகரமான விடைகளை அளித்திருந்தனர். கோட்பாட்டு ரீதியான அறிவு இன்றி ஒரு சில பரீட்சார்த்திகள் விடை எழுதியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியானது.**

## <u>பகுதி - C</u>

**வினா இல. 07**

**(A)** **(a)** இவ்வினா ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்ட "*விருப்பறிவிப்பு*" மற்றும் "*ஏற்பனவு*" என்பன தொடர்பில் சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

**(i)** அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்த போதிலும், சிலர் ஏற்பனவு தொடர்பில் முற்றடக்கமான விடைகளை எழுதியிருக்கவில்லை. எவ்வாறாயினும், அவர்கள், இது ஒரு ஒப்பந்தம் என்பதைக் குறிப்பிட்டிருந்ததுடன் அவர்களிடம் கோட்பாட்டு ரீதியான அறிவு போதியளவில் இல்லை என்பது விடைகளில் பிரதிபலித்திருந்தது. மேலும், இது சட்ட விடயங்களுடன் தொடர்புடைய ஒரு ஒப்பந்தம் என்பதை அவர்கள் குறிப்பிடத் தவறியிருந்தனர்.

**(ii)** அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்குச் சரியான விடை அளித்திருந்தனர். ஆனால் ஒரு சில பரீட்சார்த்திகள் பத்திரிகையில் இடப்பட்ட விளம்பரம் விருப்பறிவிப்பு ஒன்றிற்கான அழைப்பு என பிழையாக விடை அளித்திருந்தனர். ஆனால் இந்த நிகழ்வுகளிலிருந்து கருத்திற்கொள்ள வேண்டியது என்னவென்றால், விளம்பரத்தில் கூறப்பட்ட விதத்தில் **விசாகா** செயல்பட்டிருந்தார் என்பதாகும்.

**(b)** பரீட்சார்த்திகள், மொத்தத்தில், **வைத்தியர் பெரேரா** தொடர்பில் **பண்டா** மற்றும் **விசாகா** ஆகியோருக்குக் கிடைக்கக்கூடிய உரிமைகள் மற்றும் பரிகாரங்களை குறிப்பிட்டு சிறந்த முறையில் விடை அளித்திருந்தனர். **பகுதி (b)** இற்கான விடையின் சரியானதன்மை **பகுதி (a)** இற்கான விடையின் சரியான தன்மை மீது பெருமளவில் தங்கியிருந்தது.

**(B)** **(a)** இந்த வினா பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க, **மோகனின்** சட்ட உரிமைகள் பற்றி கேட்டிருந்தது. கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 18 மற்றும் 19 பற்றிய பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவும் வழக்குச் சட்டம் தொடர்பான அறிவும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், அதிகளவான பரீட்சார்த்திகள் **மோகன்** இழப்பை ஏற்க வேண்டியிருந்தது என சரியாக விடை அளித்திருந்தனர்.

**(b)** இந்த வினாவில், பரீட்சார்த்திகள் **ஜோன்** இன் சட்ட உரிமைகளைச் சரியாக இனங் கண்டிருந்ததுடன் அவர்களில் குறிப்பிடத்த அளவிலானோர் பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் உட்கிடை நிபந்தனைகளை நன்றாகப் பகுப்பாய்வு செய்து விடைகளை அளித்திருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை மிகவும் திருப்திகரமாக இருந்தது.**

**- - -**

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி பரீட்சிக்கப்படும் விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவை மிகக் கவனமாக வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை எழுதவும்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** விடையெழுதும்போது சரியாக அடையாளம் கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாக எழுதப்பட்டிருப் பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** விடைத்தாள்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்களும் சுட்டெண்ணும் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சியுங்கள்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * * -